உ
கணபதி துணை.
சிவமயம்.

பேரின்பக் கீர்த்தனங்கள்.

இவை

இராமநாதபுரம்ஜில்லா, சிவகங்கைச்சீர்மையைச்சார்ந்த
புவனே கவீரபாண்ட்ய புரத்திற்குப்
பிரதிநாமமாக விளங்கும்

மழவாபுரியிலிருக்கும்
மகா-ா-ா-ஸ்ரீ சின்னஸாமி பாரதிகளென்ற
சிதம்பர பாரதிகளால் இயற்றப்பெற்று

ஷியார் புத்திரன் சுப்பராமய்ய ரென்ற
இராமஸாமி அய்யரால்,

கொச்சி ராஜ்யத்தைச்சார்ந்த நல்லய புளியிலிருந்து
காரைக்குடி வந்திருக்கும்

மகா-ா-ா-ஸ்ரீ கே. அச்சுத மேனன் அவர்கள்
உதவியால்,

காரைக்குடியில் 'குமரன் அச்சுக்கூடத்தில்'
பதிப்பிக்கப்பெற்றன.

முதற் பதிப்பு] 1927-ளு [இதன் விலை அணா 6.

Copy right Registered.

1964
734
984
7-OCT 1927

உ

கணபதிதுணை.

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

இஃது

இந்நூலாசிரியர், குமாரன் சுப்பராமய்யரென்ற

இராமசாமி அய்யரால் இயற்றப் பெற்றது.

—:O:—

நேரிசையாசிரியப்பா.

பொன்மகிழ்ந் தோங்கிப் பொருந்து தென்நாட்டில்
அன்னையாங் கயற்கணி யருளுற்றோங் கிடும்
புவனேகவீர பாண்டியபுரமென
விவர்மழவாபுரி யினில்வளர் விப்ரன்
சுப்பிரமணியனும் ஸுகுண னுற்றந்திடும்
அற்பு தப்பு தல்வ னணிசின்னஸாமி
நாமதேயத்தால் நானிலந் துலங்கிடும்
பாமின் சிதம்பர பாரதி யெந்தை
இயலிசை நாடக மெனுமுத் தமிழில்
நயமாமிசைத் தமிழ் நல்கு பேரின்பக்
கீர்த்தனந் தன்னைநற் கீர்த்தியுமோங்க
நேர்த்தியாச் செய்தெந் நிலத்தினும் விளங்கினன்
தன்மஞ் செழித்துத் தழைத்திடுங் கொச்சியில்
நன்மையுற் றோங்கிடும் நல்லய புளியாம்
பதியினிற் ஜனித்துப் பரம்பொருள் தனையும்
சிதம்தரு ராஜரா ஜேச்வரி யம்மையையும்
மனதிற் கொண்டவன் மறை யோர்ப தங்களைக்
கனிவொடு சிரஸிற் கணியமாவகித் தவன்
வைத்திய சாஸ்திரம் மாந்திரீகத் தையும்
நயத்தொடு கற்றவன் நலம்பெறு காஞ்சி
சந்திர சேகரஸரஸ் வதீ ஜகத் குரு
தந்திரப்பதமலர் தமைச் சிரந்தனி லுற
வகித் தவன் சிதம்பரமாலின் பதங்களை
மகத் துவமுற்றிட மனதிற்பதித் தவன்
அச்சுத மேனோ னெனு மபிதான
முச்சித மாவுற வுலகினிற் பெற்றவன்
சிதம்பரமால் தருந்திகழ் பேரின்பப்
பதங்களை மனதினிற் பதித்திடல் போலவே
எச் செகந்தன்னிலு மிலங்கிட
அச் சிற்பதித்தவர ருள்பெற்றி ருப்பனே.

85965

கணபதி துணை

சிவமயம்

பேரின்பக் கீர்த்தனங்கள்.

மஹாகணபதி ஸ்தோத்திரம்.

இராகம் ஹம்ஸத்துவநி] [தாளம் ரூபகம்.

பல்லவி.

பாஹி பாஹி பாலகணபதே
பவஸுத குணநிதே (பாஹி)

அநுபல்லவி

தேஹி முதம் சிருத ஜநபதே
ஸிந்துரமுக வரத ஸுமதே (பாஹி)

சரணங்கள்

(௧) மூஷிகவாஹந சதுர மோதகதர கமலகர
போஷித முநிஜநநிகர பூஸுர பூஜித பவஹர (பாஹி)

(௨) கடமுநி வந்தித சரண காருண்யாம் புநிகரண
நடன சதுர நாகபரண ரஞ்சித ரஜநீச கிரண

(௩) பக்த சிதம்பர விநுத பாலநயன பணிஸஹித
சுத்த ஹிருதய ஸுஜநஹித ஸுரஜநகண பாப
ஹரத (பாஹி)

சூரைக்குடி மீனாட்சியம்மையின் பேரில்

இராகம் ஆநந்த பைரவி.] [தாளம் ஆதி.

பல்லவி.

பூமேல் வளரு மன்னையே — ஒளிபொருந்தும்
பொன்னே ரட்சிப்பாய் என்னையே — செழுங்கமலப்
(பூமேல்)

அநுபல்லவி.

காமேவு மலரினில் தேமேவுஞ் சூரைநகர்
காட்சியா வந்தருள்மீ னாட்சி மணம்பொருந்தும்
(பூமேல்)

சரணங்கள்.

(க.) வாணி—புவிமகிழ்சர்வாணி மதுரமலர் வேணி
மஞ்சுள வசனசுகபாணி—நித்யகல்யாணி
ஐந்தொழிலிலுந்திராணி பெறும் ஸௌந்தர ராணி
வேதாகமபுராணி யனுதினமும் (பூமேல்)

(உ.) தாயே திருவிதகுணமாயே மலையரசன் சேயே
ஸந்தத மெனக்கருள் செய்வாயே — யனைத்தும்
நீயே வஞ்சர் மனம் புகாயே தெரிந்திடாத நாயேன்
செய்பிழை பொருப் பாயேஅன்பரிதயப் (பூமேல்)

(ந.) மானே சொக்கேசர் பங்கில் தானே வளரும்
[கிருபைவானே
மாமுகன் மயிலின் முருகோனே தாயென்னவளர்
[மீனோர்
விழியே வுன்னை நானே மிக வணங்கி னேனே
சிதம்பரஞ்சொறறேனே பருகிநிதம் (பூமேல்)

இராகம் சென்ஸ்ஜுஞட்டி.] தாளம் சாப்பு.

பல்லவி.

ஜன்மக் கடலி லழுந்தி யழுந்தித் திகைத்தது போதுமம்மா
(ஜன்மக்)

அநுபல்லவி.

நன்மைதந் தன்பரைக் காத்தருள் செய்யும் நளின வதன
[மீனாட்சி—யென்
னிதய மலர் வளர் காட்சி ஜகத்ஸாக்ஷி பல (ஜனமக்)

சரணங்கள்.

க. முன்னமே செய்பு மிருவினை யேபல வன்னம தாகிய
[தேக—மது

தன்னையறிந்து வீண்மோகம் கொண்டு மன்யாயமா மவி
[வேகம் — தன்னில்
இன்னமும் பின்னி யுழலு மனேகஜ் (ஜன்மக்)

உ. உற்பன மானப்ர பஞ்சமெல்லா மூன்றன் கற்பனை யன்றி
[வேறில்லையே — யிதை
யெப்படிக் காண்பது சொல்லையே யிந்த அற்பமதியினால்
[தொல்லையே
எப்பொழுதுமித நற்சுக மில்லையே (ஜன்மக்)

ரு. நீயே துணையென்று நம்பினேன் நிச்சய மாயே யெனைப்
[பெற்றதாயே — பாண்டியன்
சேயே யெனோட்சிப் பாயே கனி வாயஞ்ச லென்று
சொல்வாயே — சிறு
நாயேன் பிழை பொறுப்பாயே மிகும்பல (ஜன்மக்)

ச. நம்பிய தொண்டருக் கன்புசெய் தாண்டருள் இன்பமிகுங்
[கிருபைவாரி — நறு
நிம்பமலர் புயதாரி நற்சி தம்பரஞ் சொற்ருபகாரி—சொக்கர்
தம் பங்கில்மேவி விளங்கிய பாரி யாழ் (ஜன்மக்)

இராகம் நீலாம்பரி.] [தாளம் ரூபகம்.

பல்லவி.

இன்ன மனதிரங்க வில்லையா யெளியேனை ரெட்சித் தருள்வ
துனக்கொரு மலையா (இன்ன)

அநுபல்லவி.

செங்கெல் மணிவிளைக்குஞ் சூரை நகரில் வாழும்
தீன தயாபரியே மீனவளே கிருபை செய் (இன்னம்)

சரணங்கள்.

க. விழலுக் கிறைத்தஜலம் போலே—உலக மித்தையை
நம்பி மன மெலிந்தொருக்காலே
உழலு மென் சரிதையினாலே கைவிட்—டொறுத்து
[வெறுத்திடாதே பொருத்தரு ளென்றன் மேலே
(இன்ன)

௨. வெய்யநோய்ம லஜலவிகாரம்—ஒரு மித்துருவாகியே [விளங்குஞ் சரீரம்
பொய்யென் றெண்ணுமல் கெம்பீரம்—கொண்டு
புள்ளிமான்போலே வீணில் துள்ளினே னெந்நேரம் (இன்ன)

௩. சோமசுந்தரர் மகிழ்பாரி கவி சொல்லுஞ் சிதம்பரஞ்
சொல் தமிழ்க் குபகாரி
மாமலையத்வஜன் குமாரி—செய்ய வாரிஜநயன விஸ்தாரி
கருணு வாரி (இன்ன)

இராகம் கௌளி பந்து.] [தாளம் ரூபகம்.

பல்லவி.

தருணம் தருணம் பாரம்மா ரட்சிக்க வுன்றன்
தஞ்சம் கடைக்கண்பா ரம்மா (தரு)

அநுபல்லவி.

அருணவா பூஷணங்கி கருணை மிகவும் தேங்கி
அன்பர்க்கருளும் ஸாட்சி யின்பமிகு மீனுட்சி (தரு)

சரணங்கள்.

௧. கெட்ட மதியுடைய துட்டனென்றனைத் தள்ளி
விட்டு விடாதே யுன்ற னிஷ்டம்வைத் தருள்செய்யத் (தரு)

௨. வஞ்சக் கொடியபிர வஞ்சத்தை நிஜமென்றுன்
பஞ்சடியை வணங்காப் பஞ்சைக் கோர் கதியில்லைத் (தரு)

௩. மின்னே ரிடையுடைய பொன்னே நின் பதங்களை
யெந்நேரமுந் துதிக்க யென்னை மனமதிக்கத் (தரு)

௪. செய்யச் சிதம்பரம் போற்றி செய்திடு மிகுந்த கீர்த்தி
தைபலே சூரையினில் தங்கு மீனவளே போத்தித் (தரு)

இராகம் உசேனி.] [தாளம் சாப்பு.

பல்லவி.

தஞ்சந் தஞ்சமம்மா அடியேனுன்றன் தஞ்சம்

அநுபல்லவி.

மிஞ்சு புகழ்சூரை மீனவளே யுன்றன் (தஞ்சம்)

சரணங்கள்

க. உன்னையன்றி யெனக்காரு — துணையுண்டோ வறிந்து நீகாருயென்னைக் கடைக்கண்ணால் பாரு—உன்—னிரு சரணங்களிற் சேரு —நானுன் (தஞ்சம்)

உ. புத்திரர் செய்பிழை தாயே—கண்டு பொறுப்பதல்லவோ [நீதி நீயே — நிதம் சித்தம் வைத்தருள் செய்குவாயே –வேறு – திக்கில்லையே ஜகன் மாயே—யுன்றாள் (தஞ்சம்)

ரு. வஞ்சியர் மாய்கையினாலே —சிக்கி— மனமுஞ் சுழன்றே [ருக்காலே — கண் டஞ்சினேன் நீமகிழ்வாலேயெனக் — காதரவார் மேன் மேலே நீயே (தஞ்சம்)

ச. பக்தி செய்யும்படி யாட்சி—சிதம்—பரந் தமிழுக்கருளும் காட்சி யெத்திசையும் புகழ் ஸாக்ஷி சூரை — யிலங்கி வளரு மீனாட்சி —யுன் (தஞ்சம்)

இராகம் சுருட்டி.] [தாளம ஆதி.

பல்லவி.

மனமே மலையாதே துர்விஷயத்தில் தினமுமலையாதே மூட (மன)

அநுபல்லவி.

இனமேபதியுற் பனமே செய்யும் பொல்லா (மன)

சரணங்கள்.

க. நிலையா விஷயத்தில் பெருகிறாய்—கொல்ல—னுலைவாய் [மெழுகென வருகிறாய் — பெரு

வலையார்மானெனக் கருகிறாய்—குடி விலையா—மாதரி
டம் மருகிறாய்—என்றன் (மன)

உ. மாதரிடத்திலுறவாடுறாய்—பேதா பேதந் தெரியாம
[லுங் கூடுறாய் —துஷ்டப்
பாதகருறவைக் கொண்டாடுறாய்—மெத்த வேதனிப்
பாய்த் தெரிந்து வாடுறாய்—வஞ்ச (மன)

ங. நல்லோரிணக்கந்தனை நீக்கிறாய்—பெரும்—பொல்லாத
[கதிதனை நோக்குறாய் — நிலைப்
பில்லாத சுகந்தனில் சேர்க்கிறாய்—விழல் —புல்லிற்கு நீ
ரிறைத்துக் காக்கிறாய் —மூட (மன)

ச. ஐம்பொறியிலுஞ் சென்று கலைக்கிறாய் வீணில்— வம்பு
கள் பேசி நன்றாய் நிலைக்கிறாய்—பெரியோர்
கும்பினில் நாடாமலுலைக்கிறாய்—நல்—லின்பம் நீக்கிப்
போதைத் துலைக்கிறாய் —கெட்ட (மன)

ரு. தாஸன் சிதம்பரந் தமிழ்க் காட்சி—யாள்சூரை— வாஸ
நகர்வளரு மீனாட்சி —யாள் ஸுந்த
ரேசர்மனமதியதி ஸாட்சி—யாள் தனை யாசையுடன்
பணிவாய் கண்காட்சியா—நல்ல (மன

இராகம் காபி.] [தாளம் ஆதி.

பல்லவி.

வீணினில் மயங்கிறாய் மனமே நீ (வீணி)

அநுபல்லவி.

வேணியில் நதிமதி பூணும் சோக்கேசர் பங்கில்
மேவு மீனவள்பத மாவலாப் பணியாமல் (வீணி)

சரணங்கள்.

க. அநித்தியமான ஜனிதாதி பதார்த்தம்—அவ்வளவையு
[மெண்ணிப் பாரபதார்த்தம்
தொனித்த மறையின் முடிவின் பாமார்த்தம்
இலங்கு மீனவளிரு பதங்க ளெதார்த்தம் (வீணி)

உ. பந்துஜனங்கள் பெருஞ் சந்தையிற் கூட்டம் [வந்த சரீரம் வினை வளர்ந்திடுங் கோட்டம்
இந்தக் கொடுவினை நீ செய்த போராட்டம்—உன்றனை
யல்லாலேது உலகினில் நாட்டம் (வீணி)

௩. மல ஜல கிருமிக ளாலே நிரம்பித்—துலைவறு பசி பெறு [மொருசாண் கும்பிக்
கலைகிருப் கானலைநீரென நம்பி—யலைபவர்போ லுழலு
ருய் கண் ததும்பி (வீணி)

௪. சிதம்பரஞ் சொற்கருள் செப்பு மீனாட்சி—ஜகந்தனைப் [பெற்றன்பு மிகுந்த கண்காட்சிப்
பதங்களைப் பணிந்திடி லுனக்கென்ன தாட்சி—பம்பரம்
போற் சுழலாதிரு சூட்சி (வீணி)

இராகம் சென்ஸ்ஜஞட்டி.] [தாளம் சாப்பு.

பல்லவி.

இந்த வஞ்சனை யேதெனம்மா (இந்த)

அநுபல்லவி.

சந்ததஞ் சூரைநகர் தனில் வாழ் மீனம்மா (இந்த)

சரணங்கள்.

க. தாய்க்குண்டோ பிள்ளைபேரில் கோபம்—மெத்தச்—சதி
செய்யலாமோ இதுவோ மனஸ்தாபம்
தீக்குங் கொடியதான பாபம்—தனில்யான் சிக்கி யுழல்
வதிலுனக்குண்டோ லாபம் (இந்த)

உ. உன் மனங் கல்லினுமேலோ – மலைக் – குற்பத்தியான [பெண் ணானதினாலோ
வன்மமெல்லா மென்றன்பாலோ வைத்தாய்—மாதங்கி
யான் செய் குற்றங்களினாலோ (இந்த)

௩. நினையன்றி வேறு துணை யுண்டோ –வொக்கல்–நெகிழ்ந் [தாலிரண்டு கைக் குபசாரமுண்டோ
தனையனிடமன முரண்டோ — பெத்த தாய்க்குக்
கருணையிலையோ சித்தமிரண்டோ (இந்த)

ச. சிதம்பரந் தமிழைச் செந்தேனே —யென்னத்—தினமும்
[பருகியன்பு செழித்திடுமானே
கதம்பவனக் கிளி நீதானே—யெனைக் காத்து ரட்சி
மீனாட்சி யுனை நம்பினேனே (இந்த)

இராகம் தருபார்.] [தாளம் சாப்பு.

பல்லவி.

கதியுன்ற னிருதாளம்மா அநுதினமும்
கருணை செய்தெனையாளம்மா (கதி)

அநுபல்லவி.

நிதி நிறைந்திடுஞ் கூரை நகரில் வளர் சுந்தர
நிமலர் மருவுங் காட்சி ஸௌமனோகரி மீனாட்சி (கதி)

சரணங்கள்.

அடித்தாலுந் தாய் காலைப் பிடித்துப் பிடித்துச் சுத்தி
[யழுவது பிள்ளை முறையே — பிரியம்

க. தொடுத்துக் குழந்தைக்குப் பால் கொடுத்து ரட்சிப்ப
[திந்தத்
தொல்லுலகினில் நிறையே—கடு
கடுத்துக் கோபம் செய்யாமல் தடுத்து ரட்சிப்பதுன்றன்
கடமையல்லாதெவ ராதரவுசெய்வர் அடமென்னிடம்
வைத்தி—டாமலருள் நீயே (கதி)

உ. மடியில் முட்டி வருத்தும் கன்றுக்கு பால் சுரந்து
வழங்குந் தேனுவைப் போலே —யுன்றன்
அடியிணை நினையாத கொடிய பிள்ளை யானாலும்
அன்பு வைப்பாய் மேன்மேலே —கிருபை
குடி கொள்ளும் நிதியமே வடுவில்லா மதியமே
கோதிலாமறை யோதியணுவுங்கா ணாதவாஜகஜ் ஜோதி
யேதாயே (கதி)

ந. தேடவறியாச் சரண் வேடவன்னி யனுக்குச்
சீர்பெறக் கொடுத்தாயே —உன்மேல்
பாடித்துதிக்குஞ்சிதம் பரந்தமிழுக்குப்பரி

Q2:417
N27

பாலனந் தொடுத்தாயே — யென் றுயர் கண்டும்
வேடிக்கை பார்க்கலாமோ வாடிக்கையாகவன் பால்
வேண்டும் வரந்தரும் பாண்டியன் சுதையெனும் மீனக்
கொடிபெற்ற மீனவளே தாயே (கநி)

இராகம் முகாரி.] [தாளம் சாப்பு.

பல்லவி.

இந்த நர ஜனனம் வந்ததற்கு லபலம் யாதும்நானறி
யேனம்மா (இந்த)

அநுபல்லவி.

கந்தவேளையும் வேழ முகனையும் பெற்றகயற்
கண்ணியே பூர்வஞ் செய்த புண்யவசத்தாலுதித்த (இந்த)

சரணங்கள்.

க. எழுவகைத் தோற்றத்தில் மானிட ஜன்மமிரி
தற்கு மேலில்லை யென்று நிகழுமே வேத நெறி
வழுவாம லிருந்திடி லுயர்வு தருமே யறி
வானகுருவுந் தோற்றி மகத்துவம் தருங்குறி (இந்த)

உ. கல்லுமுருகு மொரு காலத்தி லென் நெஞ்சும்
கனிந்துருகுவதற்குக் காரணம் காணேனிவஞ்சும்
புல்லும் கொடிய பாவி யல்லல் தவிர்த்தாள் கஞ்சம்
போலே விளங்கு முன்ற னிருபதங் களே தஞ்சம் (இந்த)

ங. சிதம்பரந் தமிழ்க்கருள் செய்யும் சரஜனனி
சிறந்த சூரைப் பதிவளர்ந்தருள் மறை வேலி
நிதமுந் தொண்டருக்கிரு பதங்கள்தரு கிருபாலி
நீயல்லா லெவர்க்கிறி ரட்சிப்பாய நுகூலி (இந்த)

85965

புதுக்கோட்டை ஸமஸ்தானம் இராஜமாணிக்க நல்லூ
ரென்ற இராயபுரத்தில் மீனாட்சியம்மையின் பேரில்

இராகம் பியாக்.] தாளம் ஆதி.

பல்லவி.

மீனவளே காரம்மா—வேறு துணையாரம்மா (மீன)

அநுபல்லவி.

தீன ஜனபரிபாலி மானவர்களநுகூலி
ஞான முதுமறை வேலி—ராயபுரம் வாழ் கிருபாலி (மீன)

சரணங்கள்.

௧. ஸஞ்சித பவ குடாரி மிஞ்சிய ஜகதாதாரி
மஞ்சுளகிரிசர்பாரி—மலையத்துவஜன் குமாரி (மீன)

௨. பாண்டிய தேசவர சாட்சி—பக்தர்களுக்கருளும் காட்சி
வேண்டுமறை யர்த்த சூட்சி—மேதகுவ விலஸாக்ஷி (மீன)

௩. கலைகளுட் பொருளும்நீயே—காரணங்கள் செய்விப்பாயே
மலையரசனுக்குஞ் சேயே—வரமெனக்கருள் செய்வாயே (மீன)

௪. எந்தனுடைதுயர்தீர்த்து—ஸந்ததமுமகிழ் பூத்துச்
சிந்தைகளி செய்து காத்து—வுன்தனிரு கண்ணால் பார்த்து (மீன)

ஷை யூர் சோமசுந்தரேசர் பேரில்.

இராகம் சங்கராபரணம்.] [தாளம் ரூபகம்.

பல்லவி.

என்னையாண்டருள் பதியே—சோமசுந்த—ரேசதயாநிதியே (என்னை)

அநுபல்லவி.

பொன்னுலவியாராய — புரநகர்தனிலின்பம்
பொருந்திவளரீசனே — திருந்தவே தினநம்பும்

(என்னை)

சரணங்கள்.

க. கத்துங் கருங்கடல் போல் — சுத்தும் பிறவிக்கடல்
கடத்திடும் பெரும்புணையே—நிகர்
சுத்தமிகுந்த செழும்— கமலங்களென நாளும்
துலங்கும் நின்பதத்துணையே — தந்தூன்
பத்தியில் வழுவாத சித்திபெறு மனமும் —
புத்தியும் நல்கியன்பு பொருந்தியது தினமும்

(என்னை)

உ. கஞ்சமலரிலனங்— கொஞ்சிமருவுந்தடம்
களுமடங்களுஞ் சூழும்
மிஞ்சுபுகழ்வளரும் — வேந்த நன்னகரினில்
மீனவளுடன் வாழும்
குஞ்சித யுகபத ரஞ்சிதனேயாழும் —
கொடிய பிறவிதீர்த்து— னடியாரோடன்பாய் நாளும்

(என்னை)

ங. ஸஞ்சித வினையெல்லாம் பஞ்சுபஞ்சாகத் தூற்றித்
தண்ணளி புரிவாயே
மஞ்சுளமாக நின் வெள்ளி விடையிலேறி
மகிழ்ந்தெதிர் வருவாயே
அஞ்சலென்றடியவர்க் கபயந் தந்திடுங்கையா —
அனவரதமு முன்றன் றனையே நதித் துத்தப்ப

(என்னை)

புதுக்கோட்டை ஸமஸ்தானத்தைச் சார்ந்த திருவறங்குளம் பிரகதம்பாள் பேரில்.

விநாதனஎன்பதுபோல்

இராகம் தேவகாந்தாரி.] [தாளம் ஆதி

பல்லவி.

பாஹி பாஹி மாம் பிரகன்னாயிகே — பங்கஜாஸனே
பத்ர தாயிகே (பாஹி)

அநுபல்லவி.

யோகமாதவர் போற்றி செய்திடும் —
பாகுலாவுசொல் தோகையே ஸதா (பாஹி)

சரணங்கள்.

க. கீர்த்தி சேர்விண்ணோர் — ஸ்தோத்ரஞ் செய்யவே
எர்த்திடும் ஹர தீர்த்த நாதர்தம்
மூர்த்தமார்ந்ததில் நேர்த்தியாகவே
வீற்றிருக்கும் நீ காத்தருணைம் — (பாஹி)

உ. தாயே யென் பிழை நீயேதான் பொறுப்
பாயே மாஜகன் மாயே ரட்சை செய்
வாயேபாண்டியன் சேயே நல்லிசை
வேயேயார்கனி வாயன் ஸோதரி (பாஹி)

ந. வையம்புகழ்ந்திம்ப வனமுலாவிய
மையல்கிள்ளையே மலையன் பிள்ளையே
செய்யச் சிதம்பரம் துய்யத் தமிழ்க்கருள்
செய்திடும்பிரகன் னாயிகேநிதம் (பாஹி)

இருவுமதா இராகம் நீலாம்பரி தாளம் சாப்பு.

பல்லவி.

தாயே யெனக்கருள்செய் வாயேநீயே தஞ்ச மெனக்கருள் செய்
அந்தமென் றிடும் பெற்ற (தாயே)

அனுபல்லவி.

சேயே மகிழ்ந்துதவுந் தூயவமுதே நிதம்
சிந்தை மகிழ் தரும் நிம்பவனபிரக தம்பவாஜக தம்ப ஸமர்பணி
(தாயே)

சரணங்கள்.

க. சிந்தையி லுன்னை நிதம் நாடும்—அன்பர்க்குச்
சந்தமுந் தழைக்குந் தவமுங்கைகூடும்
எந்தப்பிணியுமபறந் தோடுப்பிலி-யிடுவஞ்சனை யொடு சூனி
யமும்வில-கிடுமண்டலமுத லோரும்பணிந்திடும் (தாயே)

உ. பேய்களெல் லாமொடுங்குந் தானே—உன்றன்
பிரபலமுறும் ஸந்நிதி பேர்சொல்லில் மானே
வாயில்லா வூமையுஞ் செந்தேனே—பொழியும்—மதுரகவி
சொலும் படி கருணை செய்யும் மகிமைதனையெவ ருரை
[செய்திடுவரென் (தாயே)

ரு. செழும்நிம்ப வனம்வளர் மயிலே—ஹர
தீர்த்தர்செழிக்கவமு திசைத்திடும் குயிலே
தொழுஞ்சிதம்பரந்தமிழ்க் கொயிலே-பெறும்-துங்கமலரடி
தந்துதவுபிரகதம்பமிதுவுல கம்பரவுமுயர் (தாயே)

ஆவுடையார் கோவில் யோகாம்பிகை பேரில்

இராகம் காபி] [தாளம் ஆதி

பல்லவி.

அம்பா கிருபை தந்துரட்சி யம்மா யோககாயிகே ஜக தம்பா

அநு பல்லவி.

அன்பாய்த் திரும்பெருந்துறை தனில் வளர்
அலங்கிருதம் பொருந்திடும் படி திகழ் (அம்பா)

சரணங்கள்.

க. வாணி ஜங்கார பிரமா மதுவேணி—ஸுகபாஷித
வரசுகபாணி சந்த்ரோதய வதன கல்
யாணி புராணி ஆத்மநாதர்
மகிழ்ராணி (அம்பா)

உ. வேயே பொருந்திய யிருதோள்பெறு நீயே
எனக்கருள்தர யெதிர்வரு வாயே-மலை—
யரசன ருமையிடுஞ் சேயே மோகனஞ்
செய் மாயே யெவர்க்குந் தாயே (அம்பா)

ங. வாரி ஜதள ஸதிருச நயனவிஸ்தாரி-மலையத்—
துவஜ பாண்ட்யகுமாரி—சிதம் பரந்
தமிழ்க் கருளுப-காரி ஆத்ம
நாத பாரி தயாபரி (அம்பா)

இருவுமது இராகம் செஞ்ஜுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

மணிகுஞ் சியசா ணிணைதந் தருள்புரி வாயம்மா நூபுர
(மணி)

அநுபல்லவி.

பணிகொண் டிடுசதுர் வேதபு ரியில்வளர் பாகு
லாவியசொல் யோக நாயகி-நின் (மணி)

சரணங்கள்.

(க) திருமேவியபுய முறுமால் மகிழ்வர ஸோதரி-மிகு
ஜகபா லினிருக சுகபா லனபயோ பூதரி-மன
முருகா வெளியபுன் மதியே னிடம் வந்
துதவிக் கருணைசெய் ததியிப் பொழுதணி (மணி)

(உ) கமலா ஸனமுறு மிநமா தர்கள்பணி நாரணி-ஜய
அமரா திபரென அடியார் தமைச்செயுங்

காரணி-வரும்-இமையா சலஸுகு மாரிசு ஞ்ஞகரி
ஸய்யந் தனில்வந் துதவுங்கிரு பாகரி (மணி)

(ரு) வாதபுரீசருக் காதார வாகிய மூலமே-ஆத்ம நாத்ருடத்
துவில் பாதியெ னப்பொருந்தும் கோலமே-தமிழ்
ஓதுஞ்சி தம்பரஞ்சொல் மீதும னமகிழும்
உனையே தினம்வந் தனையே செயநவ (மணி)

திருவையாற்றின் தர்மஸம்வர்த்தனி அம்பாள் பேரில்

இராகம் பியாகடை.] தாளம் திரிபுடை

பல்லவி.

கருணை தந்தெனை யாளம்மா கமலாஸனி ஸுந்தரி
சுந்த்ரவ தனி பொழி (கருணை)

அநுபல்லவி.

தருணம் தருணம் தர்ம ஸம்வர்த்தனி ஸுருணுகரி
ஜகத் ஸம்ரட்சகி ஜநநி ஸுநயனி யுன் (கருணை)

சரணங்கள்.

க. அன்பர்க் கருள்க டாட்சி அகில புவன ஸாக்ஷி
யின்பமறையின் ஸுட்சி யென்ற னி-ருகண் காட்சி
சம்பரரிபுரிபுமோகினி ஜக தம்பமநுர சுகநாதினிஜல
ஜம்பொரு விழியருள்வாகினி யதி ஜகம்புகழ்ந் திடுந்துரந்
[தரிமிகு (கருணை)

(உ) சங்கரி மகிஷா ஸுரச் சங்கரி முகில்போல் நிறச்
சங்கரிஸோதரி ஸாது சங்க ரிட முபகாரி
துங்ககனக யுகபூதரி மது ரங்குலவிய குழல்மாதிரிமகிழ்
பொங்கியடியர் தமையாதரிநு புரம்பதஞ் சிலம்பிடும்
[படிவந்து (கருணை)

௩. பைந்தமி ழிசைச் சிதம் பரந்தமிழ்க் கருள் சிதம்-தந்தமி
கவுசிதம் தனில் ரட்சிப் பாய்ஸந்ததம்-ஐந்தருநிகர் தரு
பாணிகள்பெறு மைநதியான் மகழ்ராணிவளரும் விக்கை
புதவு ஜயபாரணி சுப மிருக்கிடும் ஐயந்தரும் படி பெருகு
(கருணை)

ஷெடி யூர் பஞ்சநதீசன் பேரில்

இராகம் பியாக.] தாளம் ஆதி.

பல்லவி.

பஞ்சநதீசா பக்தர்மன வாஸா (பஞ்ச)

அநுபல்லவி.

தஞ்சம்வே றில்லை தர்ம ஸம்வர்த்தனி நேசா (பஞ்ச)

சரணங்கள்.

௧. நின்பதத் தைத்தாரும் துன்பவித்தைத் தீரும்
இன்பவையா ருரும் சம்போகிருபை பாரும் (பஞ்ச)

௨. ஆதி யரிவேதா அறியாத நீதா
ஜோதிமலர்ப் பாதா சுகவாந் தாதா (பஞ்ச)

௩. பெண்டுபிள்ளை பாசம் பெறுமனக் கிலேசம்
கொண்டுழலுந் தாஸன் குறைதீர்வி சேஷப் (பஞ்ச)

சிவகங்கை ஸமஸ்தானத்தைச் சார்ந்த திருவெற்றியூரென்ற
பாகம்பிரியாள் கோவிலில் பாகம் பெரியாள் பேரில்

இராகம் ஸாவேரி.] தாளம் ஆதி.

பல்லவி.

மங்கள சுப வரதே நித்யகல் யாணி மனோன்மணி
பதிவிரதே முநிவா ஸந்தத சிந்ததே (மங்கள)

அநுபல்லவி.

பங்கஜ லோசனி பாபவி மோசனி பக்தா பீஷ்டவ
ரப்ர தாயிகே அவிபக்த நாயிகே காயிகே சுகே (மங்)

சரணங்கள்.

க. தீனரட் சகிநீ யானதி ஞலுனைத் தானே—நம்பித்
தேடிவந்தே னெனை நாடிக்கருணை பொழிமானே
ஞான ஸநகாதி யோகப்ரியே அபி மானஸஹித
[ருஷ்ட்யாதி க்ரியே உயர்
வானம ரர்களினி தானம றைகளொடும்
வந்திதே சிந்திதப் ரதே ஸுமதே. (மங்)

உ. கொடியபில் லிவஞ்சக மேவல்கு னியத்தொட நேகம்
[ஆகம்
படியும் வாதமுத லானவெங் நோய்களு மேகச்
[செய்துன்
அடியவர் களித்திடக் கருபைபுரி வாரி
அருணக மலதள நயனவிஸ் தாரி வடிவுறு மர்த்தசந்த்ர
ஜடிலச்ருங் காரி வன்மி கேசர் பாரி ஜகதா தாரி கௌரி
(மங்)

ங. அலைகொழிக் கும்செழுந்தேன்
மடைவழி பாயும்வெற்றி யூராய்—உன்றன்
அடியிணை பணிசிதம் பாந்தமிழ்க் கருள்புரி சீராய்—வா
மலையத்வ ஜபாண்ட்யகு மாரியென் றுயே-
வந்தர்பர் களுக்கஞ்ச லென உரைப்பாயே
நிலைபெற மிகுசெல்வ முதவிசெய் வாயே
நீயே பக்தஸஹாயே அகிலமாயே ஸ்ரீயே (மங்கள)

இதுவுமது இராகம் நாட்டைக் குறிஞ்சி தாளம் திருபுடை

பல்லவி.

கருணை புரிந்து ரட்சி யம்மா யினிதான (கருணை)

அநுபல்லவி.

தருண ரவிகிரண ஸதிருச ஸு பூஷ ணங்கி
சக்தமேவு புற்றீசர்க்கவி பக்தநாயிகே வாதாயிகே(நின்)

சரணங்கள்.

க. தாபதர்கள் நாடுமுனது சரணேபணிய
[வேநினதருள்புரி
தீபவொளி நேர்மணி யணி தாயே
அன்பின் தொண்டின் சங்கம் தங்கும்
சோபனேயே நீபதவிணையருள்
சுத்தசித்தர் கட்குநித்தம் உதவி செய் (கருணை)

உ. நிற்றலும கிமைபெருகியதிரு வெற்றிநக
ரதிலுறையெழில்பெறு
புற்றரிட மருவிய அபிராமி
இன்பந் தந்தெங் கெங்கும் பொங்கும்
பற்றுடனி ணையடிகள் தொழுசிதம்
பரந்தமிழ்க் கிதம்பெறச் சிதந்தரு (கருணை)

சிதம்பரம் நடராஜன் பேரில் சிந்தயமாகந்தமூல யென்பதுபோல
இராகம் பைரவி.] [தாளம் ரூபகம்.

பல்லவி.

சித்ஸபேசன் தெரி சனம் கிடைத் ததுவே அன்னை
[வயிற்றினிற் பிறந்
தெய்த்துழ லுமார்க் கத்தினை யடைத் ததுவே
தில்லை மன்றுளி னடம்புரிந்திடும் (சித்ஸபேச)

அநுபல்லவி.

சுத்த ஹிருதய முனிவர்க ளிரு பாலும்—மால்
மத் தளமயன் கைத்தாளத் துடன் மேலும்—சூழத்
தத்துவநாரத தும்புரு ஒத்திசை யாழிசை தம்புரு
வைத்தத்தி கீதமு ழங்கிட மெத்தவும் நிருத்தம்
விளங்கிடச் (சித்)

சரணங்கள்.

க. கண்ட வர்கள்த மிரு வினை களும் பறக்க—பிர்மா
[நந்தத்துடன்

அண்டர்கள் பொழி நறு மலர்மழை சிறக்கக்—களி
கொண்டமரர்கள் துதித்திடு மொலிநிறக்க—வழித்
தொண்டர்கள் பரவசத் தொடு தம்மை மறக்க
[மெய்யில்
மண்டிய புளகம் செழிக்கக் கொண்டுயர் பாஷ்பம்
[கொழிக்க
வந்திப் பவர்துதி விரியச் சந்தியா நடந் தெரியச் (சித்)

உ. பதஞ் சலி வியாக்ர பாதர் பணியும் பாதர்
[செம்பொன் மேருவில்
நிதஞ் ஜ்வலித்திடும் கனக ஸபைவி நோதர்—மழவைச்
சிதம்பரந் தமிழ்க் கருள் புரியும் பிரக்-யாதர்—நால்வர்க்
கிதம்பெற வுப தேசஞ் செய்திடும் போதர்— அநுஸந்
ததம்பு கழும்சிவ காமசு) வுந்தர நாயகி ஸொமவ
முதம் செரி ஜடில னேயவ முதந்த ருளுமபி ராம
(சித்ஸபேசா)

இதுவுமது இராகம் ஹமீர்கல்யாணி தாளம் சாப்பு.

பல்லவி.

ஓ சம்போ ஜய ஜக தீசா—விண்
ணோர் பணிந் திடும் தில்லைப் பதிநட ராஜா (ஓசம்போ)

அநுபல்லவி.

வாஸமி குங்கொன்றையை யணியுமுல் லாஸ
மாசிவ காமியுமை மனமகிழ் நேச (ஓசம்)

சரணங்கள்.

க. உல கவாழ்க் கையை நத்தி யுழலுமென் புத்தி
யிலகும் நின்பதங்காண்பதெப் போது முத்தி (ஓசம்)

உ. கான லதைநீ ரெனக் கருதுமான் போலே
நா னலைந் தேனுன்ற னருள் செய் மேன்மேலே (ஓசம்)

௩. அனேவயிற் றினிலுற்ற அவதிகள் போதும்
இனி யிந்தஜ ஜன்மம்வரா திடும்வழி யோதும் (ஓசம்)

௪. கரி யத னுக்கிரங்கிக் கருணை செய் நாதா
அரி யய னறியாத அம்புயப் பாதா (ஓசம்)

திருவொற்றியூர் ஒற்றியப்பர் பேரில்

இராகம் பைரவி.] தாளம் ஆதி

பல்லவி.

ஒற்றியூ ரப்பநினைப்-பக்தியு டன்பணிந்தோர்க்
குடன்முக்தி யருள் பரனே.

அநுபல்லவி.

கற்றவர் துதித்திடும் சிற்றிடை வல்லிமகிழ்
வெற்றிம யிற்குகனை நற்றவத் தினிற் பெற்ற (ஒற்றி)

சரணங்கள்.

க. மாதிரந் தனைவில்லா வளைத்தவச் சிரதேகா
மகிழ்ந்து த்ருபுரமதிற் புகுந்தெரித் தவிவேகா
பாதிம திநதியைப் படர்சடை யுற்றயோகா
பாலனத் தைச்செய்வடி வுடையாள் மகிழும்பரகா (ஒ)

௨. இருதலை நெருப்பிற்சிக் கிடுமெறும் பெனநானே
இவ்வுல கத்திலலைந் தேமதி மோசமானேன்
கருமவி னையிற்கிடந் துழலாம லடியேனைக்
கரையேற் றுவதுன்றன் கடைமைநல் விடையோனே
(ஒ)

௩. மாமறை யினந்தேடும் மந்த்ரரூ பவதீதா
மாயவன் றனக்குமைத் துனனெனும் மலர்ப்பாதா
காமன்ற னைநெற்றிக்கண் ணாற்சங்க ரித்தநீதா
கரியின்றோ லைத்தரிக்கும் வரலாகு ணவிநோதா(ஒற்றி)

காஞ்சிபுரம் ஏகாம்பரர் பேரில்

இராகம் புன்னாகவராளி.] [தாளம் ரூபகம்.

பல்லவி.

மனமே யென்றன் சொல்லை யொரு கணம்நீ நின்று
கேளாய்—இந்த வஞ்சப்பிர வஞ்சத்தினில் மயங்கா
தெனையாளாய் (மனமே)

அநுபல்லவி.

தினமே மலர்ச் சோலைகளி லனமேமிகச் சூழும்—காஞ்சித்
திருமாநகர் பெருமானடி யருமாநிழல் மருவும்படி (மனமே)

சரணங்கள்.

க. ஒட்டிலேயகப் பட்டுவாடிய சிட்டுநேர்மயங் காதே
[மின்னார்
பொட்டிலே யுடைக் கட்டிலேகட்டு மெட்டிலே
[தியங்காதே
பட்டிமாட்டினைப் போலே சுத்தி வெட்டியா
[யொருக்காலே விசைப்
பம்பரம் போலச் சுழலா மலே கம்பமூர்த்தியை
[நம்புவாய் நல்ல (மனமே)

உ. விள்ளுங்கானலை வெள்ளநீ ரெனத் துள்ளுமா
னதுபோலே—புவி
மித்தையைநிச்சயத்வமென் றுநினைத்துநீ
[யொருக் காலே
உள்ளநாளும்நீ யலைந்தாய்—பல ஞென் றுமில்
[லாம லுலைந்தாய்—இனி
யொடுங்குந்தவம் தொடங்கு யென்னு ளடங்கும்நிலைப்
[பிடங்காணுமல் (மனமே)

ங. விடையப்பற்றி லடையும்பணி யடையென்னவே
[யிருப்பாய்—நல்ல
நடையிற் புர கிடைமெத்தவும் நடைசெய் ததை
[வெறுப்பாய்
துடியாத் திரி யாதே யவ மடிவைக் குறி யாதே—ஸர்வ
ஸாட்சியாள் ஜக ஸாக்ஷியாள் கா-மாட்சிதாளிணைக்
காட்சியாகவே (மனமே)

காளஹஸ்தீசர் பேரில்

இராகம் சுருட்டி.] [தாளம் ஆதி.

பல்லவி.

தீனத யாபரா திவ்யகங் காதரா

அநுபல்லவி.

கானப்பி ரீசுவரா காளஹஸ் தீசுவரா (தீன)

சரணங்கள்.

க. ஜன்மபய பஞ்சனு கர்மநய ஞஞ்சனு
உன்மத்த வநசர னுச்சிஷ்ட ரஞ்சனு (தீன)
உ. என்னையுங் கண் பாரய்யா புன்மைதனைத் தீரய்யா
அன்னைபோல் ரட்சிக்கநின்னை யல்லாம லாரய்யா (தீன)
ங. ஸர்வபசு ரட்சண சமண்மத சிட்சண
வரமிகு அரிப்ருமாதி கெர்வித பட்சண (தீன)

வேதகிரி நாதர் பேரில்

இராகம் செஞ்ஜுருட்டி.] [தாளம் ஆதி.

பல்லவி.

வேதகிரி நாதா சீதஸாம கீதா

அநுபல்லவி.

சீதரந யனுர்ச்சித பாதவிணை தாதா (வேத)

சரணங்கள்.

க. சித்தமிரங் காதா முக்திவரந் தாதா
சக்திதா ணைங்காணைப் பெற்றஸுக தாதா (வேத)

உ. பாசியென்ன மூடும் பாசவினை யோடும்
நேசநின்பு கழ் கேழ்க்கிலா காசமதில் நாடும (வேத)

ரு. பக்தர்கணம் சூழும் சித்ரமடம் நாளும்
பக்தியாவி ளங்கவோங்கி ருத்ர்ராஜர் வாழும் (வேத)

புதுக்கோட்டை ஸம்தானம் திமெய்யத்தில் ஸத்யகிரீசர் பேரில்
இராகம் சங்கராபரணம்.] [தாளம் ரூபகம்.

பல்லவி.

மெத்தவும் நம்பி னெனய்யா—திரு
மெய்ய நகரினில் மெய்யரே மெய்யா (மெத்த)

அநுபல்லவி.

சித்தமி ரங்கியருள் நாடி அன்பு வைத்திடுவாயுனைத்
[தேடித்—தினம்
பக்திபு ரிந்துடன்கொண் டாடி—உன்றன் பதங்களை
யடியேன்றன் சிரந்தனி லேசூடியருள் (மெத்த)

சரணங்கள்.

க. ஐம்புலன் களையும்நான் வென்று நின்—அடியர்கு
[ழாங்களிற் சென்று—மிக
நம்பியே துதித்து நின்று—மனம் நாடிநாடிமிக
[நீயே கதியே யென்று (மெத்த)

உ. திரையார் கடற்கரைக் காக—மெள்ளக் மெள்ளக்
[கரைகா ணுமலநேகம்—சென்மக்
கருவார் குழிவிழு மோகம்—தரு பிரவா கத்தில்முழு
[காமலுன் ஸ்நேகம் (மெத்த)

ரு. ஸத்யகிரீசஸர் வேசா—பரி சுத்தமி குந்தஉமை
[நேசா—தொண்டர்
சித்தவம் போருக வாஸா ஜகத் கர்த்தாவே
[கருணைவைத்தாள் ஸுரர் நேசா (மெத்த)

திருக்கடவூர் அமிருதகடேசர் பேரில்

இராகம் முகாரி.] [தாளம் சாப்பு.

பல்லவி.

கடவூ ரமிர்தகடேசா யெனைக் காத்தரு ளபிராமி
[நேசா

அநுபல்லவி.

குடவால வளைமலர்த் தடமீ தி னில்மணி
கொழித்திடு மணிக்கதிர் செழித்திடும் வளர்திருக் (கட)

சரணங்கள்.

க. காலனை யுதைத்திடும் பாதா—மார்க் கண்டனை
[யிரட்சித்த நீதா
ஆலாலங் கண்டத் தமர்ந்திடச் செய்விநோதா
சூலதா ரணஜகத் காரண பசுநாத (கட)

உ. பிறவிப் பெருந்துபரம் நீக்கச்—சிவப் பேறுதந்
[தாநந்தம் தேக்கித்
திறமுற பரிசுத்த திடசித்த முமுண்டாக்கி
[மறைமிக்க வளரும்நின் மலரடியுறுவாக்கிக் (கட)

ங. சங்காபிஷேகதீர்த்த மோகா—யெங்குந் தழைத்திடும்
[யோகவ நேகா
மங்களந் தனையன்பர் தங்கட்க ருள்சிநேகா
[மகிழ்ந்துக ருணைசெய்வாய் ஜகம்புகழ் நாகரீக (கட)

மாயூர நாதர் பேரில்

இராகம் நாதகிரியை.] [தாளம் ரூபக சாப்பு.

பல்லவி.

அன்னை வயிற்றி லின்னம்பிறவா தென்னைவந்து
[காவய்யா (அன்னை)

அநுபல்லவி.

சொன்னமுலாவி வாழ்மயிலாடு துறை நகர்வளர் நீதரே
இன்னரேசனைத் தோழமைகொண்ட கேயூர
[மொய்ம்புடை மாயூர நாதனே (அன்னை)

சரணங்கள்.

௧. அம்புவி மாதர் செம்பொன்னிம் முன்றை
[நம்பிநினை நினையாமலே
வெம்பியே சானின் கும்பி வளர்க்கும்
வம்பனென் றேதள்ளா தன்புட னேபல (அன்னே)

௨. எத்தனை யோஜன் மத்துழன்றேன திற்பலன்
[சற்றேனும் காண்கிலேன்
சித்தம் வைத்திரட் சித்திடாவிடிற்
றிக்குண்டோ வீசனே பைக்குணின் றேங்கியே
(அன்னே)

௩. கன்னலும் நாளும் செங்நெலுஞ் சூழும்
[காவிரித் தென்கரை மேவிவாழ்
கஞ்சமாமுக வஞ்சல்நாயகி காந்தனே யாவைக்கும்
[வேந்தனே சேர்ந்துநான் (அன்னே)

வைத்தீசுவரன் கோவில் வைத்தியநாதர் பேரில்

இராகம்—ஸாவேரி] [தாளம்—ஆதி

பல்லவி.

எங்கே யொளித்தீ ரீசனே—யென்னிஞ்சிலிருந்
(தெங்கே)

அநுபல்லவி.

மங்கள மிருந்திடும் புள்ளிருக் கும்வேளூரில்
வாழும்வைத் தீசரே நாளும்தெ ரிந்திடாமல் (எங்கே)

சரணங்கள்

௧. என்னையெ னக்குத்தெரி யாமலு மேமறைத்து
[முன்னரி யயிந்திர ஜாலமெல்லாம் நிறைத்து
அன்னைவ யிற்றுக்குவித் தாகவென் னைவிரைத்து
மென்னப லனைக்கண்டெ ரென்மன தைககரைத்து
(எங்கே)

௨

உ. எத்தனை கோடி ஜன்ம மெடுத் தலுத் ததில்வாட
இன்னமிஜன் மம்வருமோ வென் றுகல ங்கிநாட
மத்தம்க ளிதின் ருற்போல் மயங்கியே ப்ரமைமூட
மாயாப டத்தி னுலே மறைத்தீ ரன்னமுங் கூட
(எங்கே)

ங. இனிமேலா கிலும் வெளி வந்துக்ரு பைக்கண் பார்ப்பீர்
என்றன்ப வநோய்க்கும ருந்துகொடுத் துத் தீர்ப்பீர்
தனியேவி டாமலன்பர் தமைத்தினந் தோறுங்காப்பீர்
தையல்நா யகிதன்னைத் துய்யநற் பாகஞ்சேர்ப்பீர்
(எங்கே)

சீகாழிப் பிரமபுரீசன் பேரில்

இராகம் சுருட்டி.] [தாளம் ஆதி.

பல்லவி.

பிரமபுரீசா பேசுமறைவாஸா

அனுபல்லவி.

திருநிலை நாயகி தினமகிழ் நேசா (பிரம)

சரணங்கள்.

க. ஆசையதி னாலே அலையுமென் பாலே
பாசம்வருங் காலே பதந்தாமேன் மேலே (பிரம)

உ. சித்தமிரங் காதா திவ்யமலர்ப் பாதா
பக்தர்க்கருள் தாதா பவந்தீர்க்கும் போதா (பிரம)

ங. அம்பலத்தி லாடும் அய்யநதி சூடும்
சம்போமறை பாடும் சயம்பு மால்தேடும் (பிரம)

ச. பெந்துஜன நாட்டம் பெருஞ்சக்தைக் கூட்டம்
உந்தன்பதத் தேட்டம் உற்றபினென் வாட்டம் (பிரம)

மதுரை சுந்தரேசன் பேரில்

இராகம் காம்போதி] [தாளம் அடதாள சாப்பு

கண்ணிகள்.

க. பூமி புகழ்ந்திட மாமது ரைவளர் ஸுந்த ரேசா—நல்ல
புத்தியு முன்பாத பக்தியுந் தந்தருள் ஸுந்தரேசா

காமி தார்த்தபல தாயக நாயக ஸுந்தரேச—ஜகத்
காரண நிறைபரிபூரண ஸுரவர ஸுந்தரேசா

உ. பண்ணுவ ரும்பாவம் பண்ணுமெளியேனை
[ஸுந்தரேசா—நீ
பாதுகாக் காவிடில் யாதும்பு கலுமுண்டோ
[ஸுந்தரேசா
எண்ணுத தைச்செய்யும் மாபாத கனேமுனம்
[ஸுந்தரேசா
இரட் சித்தவ னுக்குயர் முக்தித ரவில்லையோ
[ஸுந்தரேசா

ங. ஆராலுஞ் செய்யா வரும்பாவம் செய்தேனே
[ஸுந்தரேசா
அஞ்சல்புரிந்தன்பி னுதா வுசெய்வாய் ஸுந்தரேசா
தீராயென் வினைகளைச் செலவேட்டி லெழுதுவாய்
[ஸுந்தரேசா—அப்படிச்
செய்தாலடியேனு னுய்குவேன் மதுரை ஸுந்தரேசா

ச. அன்னைபி தாகுரு தெய்வமும் நீயன்றோ ஸுந்தரேசா
அன்புவைத் தாண்டரு ளாண்டவ னேகூடல்
[ஸுந்தரேசா
என்னைநீ மறந்தால் யாவரெனைநினைப்பார் ஸுந்தரேசா
[யெளி
யேன்செய் பிழையைமட்டும் நீமறப் பாயென்றன்
[ஸுந்தரேசா

ரு. கருக்குரு விநாரை சிலம்பிக்கன் புவைத்தாண்டாய்
[ஸுந்தரேசா—அவை
களைநம்பித் தஞ்சமா யுனைநம்பி னேன்க்ருபை செய்
[ஸுந்தரேசா
சருக்கரைப் பாகாயென்னுனி மாதர்ம யூத்கிடா னேன்
[ஸுந்தரேசா—அது
தன்னாலு னைமறந்தே னென்னைய றந்திடாதே
[ஸுந்தரேசா

ச. கர்மஸா க்ஷியாயுயிர் களையெல்லாம் பார்க்கும்நீ
[ஸௌந்தரேசா—மார்க்

கண்டேச ரையப்படிப் பார்க்கலா காதோ பின்னும்
[ஸௌந்தரேசா

ஜன்மமெ டுத்தா லுன்னை மறவாதி ருக்கச்செய்வாய்
[ஸௌந்தரேசா—யுன்றன்

செந்தாம ரைப்பதங் களிலென்மனதைச்சேர்ப்பாய்
[ஸௌந்தரேசா

இராகம் காம்போதி] கண்ணிகள். [தாளம் சாப்பு

க. அகணித குணஸர்வேசா சபராட்சி நேசா
நிகமாகம சாஸ்த்ரஸார நித்யானந்த ஸௌகுமார

உ. பாதந டனவிநோத—பங்கஜபாத
உரஸிஜத ஹநநேத்ரா ஓதும்ஜுவாத சாந்தக்ஷேத்ர

ங. என்பிழை பொருப் பாயய்யா—ஏழையானுய்ய
அன்புவைப்பாய் ஜகன்னாதா—அடியேன்
[ஏழை தெரியாதா

ச. நிஜபக்த ஜநோபகார—நிஷ்டூரகால ஸம்ஹார
கஜமுகஷண் முகதாத கங்காதர ஸங்கீத

ரு. அடியேனைத் தொண்டினிற் சேர்ப்பாய்
[அன்புட னிதங்காப்பாய்
படியில்ஏழை யென்போல் யாரே பார்த்தருளென்
[றனைநேரே
சங்கரா சங்கரா சம்போ சிவ சங்கரா சங்கரா ஹரா
ஸாம்ப பாஹிமாம் க்ருபாகரா

நாமாவளி இராகம் யதுகுலகாம்போதி தாளம் ஆதி
நாதநாமக்கிரியையிலேயும் பாடலாம்.

சந்த்ர சூடசிவ சங்கர பவஹர சம்போமாம் பாஹி
இந்த்ராதிஸுர ஸாமுநி வந்தித சிந்தித பதம்தேஹி

குன்றக்குடி ஷண்முகநாதன் பேரில்

இராகம் பிலஹரி] [தாளம் ஆதி

பல்லவி.

மா மயூர மீதி லேறி வா யென்னை ரட்சிக்க (மாம)

அனுபல்லவி.

காமி தார்த்த பலதாயக ஸுர வர ஸாமிநாத
மரகத சைல ஸதிருச (மாம)

சரணங்கள்.

க. நார தாதி யோர்க ளிசைபாட—அரம்பைமாதர்
ஆரு லாவி நேரில் நடமாட—மறைமு னிவர்
சீரி னுசிமொழி கூற நீபமுறு தாரு லாவுபுய மேரு
[வோடிலகு (மாம)

உ. பாச பவமென மோச வலைதனையே—கடந் தனது
பாத மலரிணை யே துதிசெய் தனையே—பணிபு மன
தாசையு மகிழ்புரி பூஜையுந் தினந்தின மேசெய்யும்
[படியருள் நேசமுட னுதவ (மாம)

ங. கதிக்கு மடியவர் துதிக்கும் வளர்கிலா—சிதம்ப ரபா
ரதிக்கி னியவர மதிக்க வு நள்வேலா—தினந்தினமும்
அதிர்க்கு மிடமென வதிக்கு மயில்மலை யதிற்கு லவியவ
[ணிதிக்கு மகிழ்புரி (மாம)

இதுவுமது இராகம் பிலஹரி தாளம் ஆதி.

பல்லவி.

மால் மருகனை யநுதினம் நினை மனமே தினமே கனமே
யுதவிய (மால்)

அனுபல்லவி.

வேலை யணிகர பால ஸுகுணாலி சால மிகுபு
சீல கோலாகல (மால்)

சரணங்கள்.

க. மானை நிகர்விழி யானைப் புணர்முரு கோனை
[பசுரர்கள் ஸேனை
பொடிபட லூனை வுதரயி லானை யமரர்கள்
[கோனை மகிழ்ச்செய்
தானைக் கௌஸ்துப (மால்)

உ. வாளைப் பழித்தவிழி யாளை மடல்விரித்த பாளைக்
[கமுகுகெழு
தோளைக் குறத்திபுணர் வேளைக் கமலநிகர்த்
தாளை ப்பன்னி
ரெண்டு தோளைக் கருத்தில்வைத்த வேளைக்
[கெழில்பெறு (மால்)

௩. ஸோம முகவபி ராம ஸ்ரீகதம்ப தாம மணிபுய நேம
[சிதம்பர
நாம கவிக்கருள் பூம னடியவர் தாமகிழ்வுபெற
க்ஷேம முதலிய (மால்)

மகாவிஷ்ணுவின் பேரில் நோட்டு.

க. மகமபா மகமபா ததநி ஸாநி தாநிபா
திருவுலா வியபுயா சலம்ரு துத்வ பாதவந்,
ஸரிஸ நிஸநி தநிதபதப மகம கமக ரிஸரிஸா
நிதபு தஜந ஹ்ருதய கமல வஸித ப்ரமா ஸுந்தரா

ஸ்வரங்கள் முன்போல.

மருவுலா வியதொழா வசைய சித்ர கருடன்மேல்
வருக வருக வருக வடியேன் மனது முருக வுருகவே
நிநரீ நிதரீ பமகம ரிநிஸரி ஸநிஸரிஸா
ஸாமா ருரகா சலமுறு க்ருபைமொழி தருமுகிலே

சுப்பிரமணிய ஸ்வாமி பேரில் நோட்டுக்கள்.

௧. கமபா கமபா தாநி ஸாதநி பா—கம
வநஜா ஸனன்மா னும்பொருந் திடவே மண
கத்தப்பாமக ரிப்பமாகரி ஸைம்மகாரிகஸா
மண்புற் றுந்தி கந்தக்தந்தக தம்பத் திண்புயவார்

ஸ்வரங்கள் முன்போல்.

௨. கநகா சலஸா ரங்க சந்த்ர கலா தரர் கஞ்சச்
சிந்தைமகிழ்ந்தொப் புய்ஸுத கந்தர்ப் பண்பணிமா
பாரி பாரீ பாமரி மாகரி ஸாரிநிஸா
வா கா தே கா மந்திர திண்புய ஸுந்தரனே

௩. ஸாஸப ஸாஸப கரிகபா மாகரி மாகரி மாகரிஸா
பூமகள் மேவிய மால்மருகா தாமபி லேர்வளர் வேல்
பாபக பாபக பாகபதா மாகரி மாகரி கரிகபா [முருகா
மாமலர் நீபமு மேல்முரு கார் மால்புய லேக்குறை
ரிகம பதப கமரிஸா [யேபெருக
வருக வருக வருகவே

(a) ஸ்வரங்கள் முன்போலவே

ஸாபிம பூவ ராசலனே தாமவீ ராறுபு யாசல னே
மாமறை யேதுதி காவலனே மால்பிடி மேவுகோ
வருக வருக வருகவே, [லாகலனே

(b) ஸ்வரங்கள் முன்போல.

ஜபம்பெரு குங்கந்த னேகுகனே சிதம்பாம் போற்றும்ப
[தயுகனே
வைபம்திக முந்திரி யம்பகனே மகிழ்ந்தருள் செய்திடும்
[ஷண்முகனே வருக வருக வருகவே

௧. ஸநி ஸாஸஸநிஸ ரீரி ரிஸரி காப மாகரீ ஸரி
அதி வெற்றிபெருகு சித்ர மயிலில் உற்ற குரு பாா பா

6A
2-144

 பேரின்பக் கீர்த்தனங்கள்.

காப மகரி ஸாஸ ஸநிப தாநி ஸரிநிஸா
வெற்பில் வளரும் அற்பு தவருள் பெற்ற சுபகர
கப்ப பகப தப்ப மகரி கப்ப மமகரீ ஸரி
நற்ற மிழ்முனி வர்க்கொ ருபொருள் சொற்ற நயவர [அம
கப்ப மகரி ஸஸ்ஸஸநிபதநி ஸரிநிஸா
ரர்க்க திபதி பேற்ற ஸுதைம ணத்த கனவரா
கபா கபா கதாபமக ரிமா ரிமா ரிபாமகரி
ரமா ஸமா கமாதிபதி ஸமா ணமா னமால்மருக
ரிகம பதப கமரி ஸாரிஸா
நிதிம தியணி யுமைஸு தாகரா

ஸ்வரங்கள் முன்போல.

௨. எழில் மஸ்த கஜமு கர்க்கி னியஸு கிர்த்த நுஜவராமலர்
மெய்க்க ணொருகு றக்க னியைய ணைத்த நயவரா
பக்தர் களையி ரட்ச ணைபுரி சக்தி தாகரா யுக
பத்ம பதமெ னக்க ருள்புரி நித்யஸுகசிரா
பரா பரா ஸுரா திபர்கள் ஹரா ஹரா நிரா மயஸ
பலமு தவெனு முரைகொள் நாதனே

மங்களம்.

௧. கப கப தாபகரீ கரீ கரீ
மாம யூர வாகனர்க்கு ஜயா ஜயா
கப கப தாப கரீ ஸரி காரீஸா
வல்லி யானை மோக னர்க்கு ஜய மங்களம்
ஸாஸ ஸஸ்ஸஸா தாநி ஸதபா
பாம லர்களைத் தாம மணியும்
கப கப தாப மரி ஸரி காரிஸா
பன்னி ருபு யாச லர்க்கு ஜய மங்களம்

ஸ்வரங்கள் முன்போல.

௨. மங்க ளகு ஹைக ரர்க்கு ஜயா ஜயா
வல்லி யானை மோக னர்க்கு ஜய மங்களம்
பங்க ஜையும் வாழ் குன்றை நகராள்
பன்னி ருபு யாச லர்க்கு ஜய மங்களம்

85965